
# வள்ளுவத் தோன்றல்களே! வாருங்கள்!



இரா. இளங்குமரனார்

# வள்ளுவம் வழியில்

## வாழ்க்கைத் துணை நல ஏற்பு விழா

## திருவள்ளுவர் மற்றும் பெரியார் வழி நூல்கள் வழங்கல்

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்து ஊறும் அறிவு - (குறள் : 396)

விளக்கம் : மணலின்கண் கேணி, தோண்டிய அளவிற்குத்
தண்ணீர் ஊறும், அதுபோல மக்களுக்கு அறிவு, கற்ற அளவிற்கு ஊறும்.



இணையர்

**த. ஆதவன்** D.H.M., M.D.P., (USA) - **இரா. சிவசங்கரி** B.E.,

தி.ஆ.2050, மடங்கல் (ஆவணி) திங்கள் 18 அறிவன் (புதன்) 04.09.2019

---

நிகழ்வில் கலந்து கொண்ட எங்களது உறவினர்கள், சான்றோர்கள், தோழர்கள்,
ஆகியோருக்கு திருவள்ளுவர் நெறியில் பகுத்தறிவு பண்புடன் கூடிய
நூல்களை தங்களுக்கு வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

இரு குடும்பத்தார்

நன்றி! நன்றி!! நன்றி!!!

# வள்ளுவத் தோன்றல்களே! வாருங்கள்!

இரா. இளங்குமரனார்

**திருவள்ளுவர் தவச்சாலை**

திருவளர்குடி (அல்லூர்)

திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620 101

தொலைப் பேசி : 0431-2685328

# நூற்குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | **வள்ளுவத் தோன்றல்களே! வாருங்கள்!** |
| ஆசிரியர் | இரா. இளங்குமரனார் |
| மொழி | தமிழ் |
| பொருள் | வள்ளுவம் |
| முதற் பதிப்பு | மார்ச்சு 2014 |
| பக்கம் | 44 |
| எழுத்து | 13 புள்ளி |
| தாள் | 13.7 வெள்ளை மேப்லித்தோ |
| அளவு | 1/8 |
| படிகள் | 1100 |
| விலை | உருவா : 25 |
| உரிமை | ஆசிரியர்க்கு |
| வெளியீடு | முனைவர் அ. ஆறுமுகனார் - சாரதையார் நிறுவிய பாவேந்தர் பதிப்பக அறக்கட்டளை, திருமழபாடி, அரியலூர் மாவட்டம். |
| நூலாக்கம் | "தி பிரிண்டிங்கு அவுசு" திருச்சிராப்பள்ளி - 23 |

நூல் கிடைக்குமிடம்:

- **திருவள்ளுவர் தவச்சாலை**
  அல்லூர் 620 101, திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
  தொலைப்பேசி எண் : 0431 - 2685328

# நூற்கொடையார் மேற்கொடை

## முன்னுரை

குறைந்தது முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் எழுதியது, இச்சிறு சுவடி! பழைய எழுத்துகளைப் படியெடுத்தார் என் இனிய மகளார் **புலவர் கலைமணியார்.** பத்தாயிரம் பக்கங்களுக்கு மேற்பட்டவை. இன்னும் படியெடுப்பைத் தொடர்கிறார்! இடையே, ஒரு சிறு சுவடி என்னால் ஆக்கப்பட்டுக் கிடப்பாகக் கிடந்தமை கண்டேன்! நான் தான் எழுதினேன் என்பதையும் மறந்துபோன நிலையில், கைவரப் பெற்ற சுவடி ஆக்கிய களிப்பை, எக்களிப்பும் ஆக்கிவிடாது!

எழுதி அச்சிடத் தந்த பாரிய **அகத்திரட்டு** (ஆயிரத்து அறுநூறு பாடல்கள் பொருள் வகைப்பட்ட முறையில் அமைந்தது.) அச்சிடத்தந்தது வெளிப்படாமலும் படி பெறக் கூடாமலும் போயது. **'கனாநூல்'** அவ்வாறே கனவாகியது. **'வள்ளலார் படியாதவரா?'** படியும் வராமலே மறைந்தது. ஓவியம் தீட்டத் தந்ததும் மாணவர்களுக்கு உரியதுமாம் **பத்துச் சுவடிகள்** போன இடமும் தெரியவில்லை! இவற்றின் இடையே, யான் எழுதினேன் என்பதையும் மறந்து போன நிலையில் எனக்குக் கிட்டிய என் எழுத்துக் குறுஞ்சுவடி,

"வள்ளுவத் தோன்றல்களே! வாருங்கள்!"

என்பது எனின், களிப்பும் எக்களிப்பும் ஏற்படாவா?

**அறமும் பொருளும்** ஆகிய திருக்குறள் 108 அதிகாரங்களும், அதிகாரம் ஒவ்வொன்றும் ஐந்து முதல் பத்து வரிகளுக்குள் அமையுமாறு திரட்டாக வரையப்பட்டவை.

**காமத்துப்பால்** ஆய்வு, அதிகார வைப்பு, தொல்லாசிரியர் நெறி, நூன்முறை விளக்கம் எனத் தொகையாய கட்டுரை வடிவினது. இருந்தது இருந்தவாறே அச்சிடப்பட்டது!

என் பழஞ்சுவடி கிட்டியது போலவே, கிட்டியது ஒரு பெருங் கொடை! **திருமழபாடியை** நினையும் போதெல்லாம் வாரப்பாடல் கூறும் **"மழபாடியுள்**

**மாணிக்கம்"** தோன்றும்! மற்றொரு மாணிக்கமும் தோன்றுவார்! அவர் **திருமழபாடி முனைவர் திருமிகு அ. ஆறுமுகனார்!** இடைவிடாப் புலமைக் கொடை நூலர் அவர்! தவச்சாலை அறக்கட்டளையர்! புரவலர்: திருமழபாடித் தமிழ்ச் சங்க நிறுவனர்; தலைவர்! அச்சங்கத்தில் அவர் கொடையில் வெளிப்பட்ட **'முத்திரைக் குறள்கள்'** என்னும் என் நூல் அறிமுகக் கூட்டம் நிகழ்ந்தது. நூலறிமுகத்திற்கெனச் சென்றேன். அந்நாள் 15.01.2014 - தைத் திங்கள் இரண்டாம் நாளாம் திருவள்ளுவர் நாள் (2045). அன்று, அரசாளும் கோட்டையிலே, **திருவள்ளுவர் விருது** வழங்கும் நிகழ்வு உண்டு. மழபாடி ஆறுமுகனார் அந்நாளில் என்னைத் தமிழ்ச் சங்கத்திற்கு அழைத்து,

**"திருவள்ளுவர் வாழ்நாள் சாதனையாளர்"**

என்னும் விருது வழங்கி, அரசு வழங்கும் விருதுத் தொகையாகிய உருபா 'ஓரிலக்கம்' பொற்கிழியாக வழங்கிப் பெரும் பாராட்டும் செய்தார் எனின், பண்டை அரசும், வேளிரும், வண்மையரும், ஓர் உருவாய் ஒரு புலமையரும் விளங்க முடியும் என்பதை ஆவணப்பதிவாக ஆக்கிய அருமையது அல்லவா! இளமை தொட்டே எளியேன் கொள்கை, "தமிழால் வந்தது தமிழுக்கே" என்பதால், அத் தொகை கொண்டு எத்தனை நூல்கள் வெளியிடமுடியுமோ அத்தனையும் **"ஆறுமுகனார் சாரதையார்" அறக்கட்டளை நிறுவிய பாவேந்தர் பதிப்பக வெளியீடாக** வெளியிடத் தீர்மானித்து முதல் வெளியீடாக வருவது,

"வள்ளுவத் தோன்றல்களே! வாருங்கள்!"

என்னும், இச் சுவடியாம்! இவ்வரிசையில் பத்துச் சுவடிகள் தொடரும்.

மறந்தும் மறைந்தும் கிடந்த சுவடியை முதல் வெளியீடாக வெளியிடுவது, எதிர்பாராமல் எய்திய கொடைமைக்குத் தகும் அல்லவோ! அடுத்தும் தொடுத்தும் வள்ளுவம் பரப்பும் சுவடிகள் வெளிப்படும்! அக்கொடை - அறக்கொடை!

"நூற்கொடைக்கு மேற்கொடை இல்லை" என்பதை வென்றெடுப்பது, **நூற்கொடையரே, நூற்கொடை வண்மையராகவும் திகழ்வது!**

அறக்கட்டளைக் கொடை, குடும்பக் கொடை தானே! ஆதலால் குடும்பத்தினர் அனைவருக்கும் தமிழ்ச்சங்க வழியாக அல்லவோ கொடை வழங்கப்பட்டது: அதனால், தமிழ்ச் சங்கத்தார் அனைவருக்கும் - யான் நெஞ்சார்ந்த நேய நன்றியுடையேன்!

வழக்கம் போல் திருச்சிராப்பள்ளி அச்சுக்குழுமம், அச்சூர்தியில் ஏற்றித் தமிழுலாக் கொள்ளத் தமிழுலகுக்கு வழங்குகிறது என்றால். அதன் மெய்ப்பினை, மெய்யார்ந்த தொண்டாகக் கொண்டு பார்த்து உதவும் முனைவர் திருமிகு **பி. தமிழகனார்க்குத் தொடர் நன்றியுடையேன்!**

வாழிய நலனே! வாழிய நிலனே!

திருவள்ளுவர் தவச்சாலை, *இன்ப அன்புடன்,*
அல்லூர் 620101, **இரா. இளங்குமரன்**
திருச்சிராப்பள்ளி மாவட்டம். *(30.01.2014)*

(vi)

# க. அறத்துப்பால்

## கடவுள் வாழ்த்து

- "நம் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட தோர் ஆற்றல் உண்டு. அவ்வாற்றல் உலகை இயக்கிவருகிறது" என்று நீங்கள் உணர்கிறீர்களா? உணர்ந்தால் வள்ளுவத்தின் 'கடவுள் வாழ்த்தி' ற்குச் சொந்தக் காரர்கள்: வாருங்கள்; நீங்கள் வள்ளுவர் வழியை ஏற்றுப் போற்றுபவர்கள்.

★ ★ ★

## உ. வான் சிறப்பு

- மரங்களை வளர்த்தால் மழைவளம் பெறலாம் என்னும் இயற்கைக் காவலரா நீங்கள்! வாருங்கள்; வள்ளுவ **வான்சிறப்பின்** சொந்தக்காரர் நீங்கள்! வான்மழை நீரே அமிழ்து; வான்மழை ஒழுக்கே, உலக ஒழுக்கம் என்பவை உங்கள் உள்ளகப் பொருளா? வள்ளுவ வான்மழைச் சீரறிந்த செவ்வியர் நீவிரேயாம்.

★ ★ ★

## 3. நீத்தார்பெருமை

- அறிவால் ஐம்புலனையும் அடக்கிச் செயற்கரிய ஆக்கமெல்லாம் செய்யலாம் என்னும் உறுதிப்பாடு உடையவர்களா நீங்கள், வாருங்கள்; நீங்கள், வள்ளுவ **நீத்தார் பெருமைக்கு** நிலைத்த சொந்தக் காரர்கள்.

★ ★ ★

## 4. அறன் வலியுறுத்தல்

- மனத்தில் மாசு இருத்தலால் தான், நீரிலும் காற்றிலும் ஊணிலும் மருந்திலும் இன்ன பிறவற்றிலும் மாசு ஏற்படுகின்றது என்னும் மனமாசுக் கட்டுப்பாட்டாளர்களா நீங்கள்; வாருங்கள், நீங்களே வள்ளுவத்தின் **அறன் வலியுறுத்தல்** சொந்தக்காரர்கள்.

★ ★ ★

## 5. இல்வாழ்க்கை

- எனக்காக வாழும் வாழ்விலே எல்லோருக்காகவும் வாழ்வேன் என்னும் விரிவு உங்களுக்கு உண்டா? வாருங்கள்! நீங்களே வள்ளுவ **இல்வாழ்க்கையின்** சொந்தக் காரர்கள்! முதியோர் இல்லங்களும் ஏதிலியர் இல்லங்களும் நாட்டில் தோன்றாதிருக்க நல்ல வழிகாட்டும் இல்வாழ்க்கைத் தோன்றல்கள் நீங்களே!

★ ★ ★

## 6. வாழ்க்கைத் துணை நலம்

- கணவனுக்கு மனைவியும் மனைவிக்குக் கணவனும் என ஒருவருக்கு ஒருவர் துணையாக வாழ்தலைப் பேணுகிறீர்களா, வாருங்கள் நீங்களே வள்ளுவ **வாழ்க்கை துணை நலத்தின்** சீரிய சொந்தக் காரர்கள்.

★ ★ ★

## 7. மக்கட் பேறு

- எம்மக்களை எம்மினும் தக்கவர்கள் ஆக்கி உலக நலத்திற்கு உழைக்கும் உரிமையாக்குவோம் என்னும் நன்னெஞ்சம் உடைய பெற்றோர்களா நீங்கள்? வாருங்கள்: நீங்கள் வள்ளுவ **மக்கட் பேற்றினைப்** போற்றும் உரிமைச் சொந்தங்கள்.

★ ★ ★

## 8. அன்புடைமை

- அன்பின் இயக்கம் ஆவதே என் வாழ்வின் குறிக்கோள்; உயிரை உற்றதும் ஓம்புவதும் அதற்கே என்னும் குறிக்கோளாளர்களா நீங்கள். வாருங்கள்; நீங்களே வள்ளுவ **அன்புடைமைக்கு** அருமைச் சொந்தக்காரர்கள்.

★ ★ ★

## 9. விருந்தோம்பல்

- "என் கண் காண எவரொருவர் பசித்திருக்கினும் என்னால் இயன்றதைத் தந்து யானும் உண்பேன்" என்னும் ஈவிரக்கம்

உடையவர்களா நீங்கள். வாருங்கள் நீங்களே வள்ளுவ **விருந்தோம்பலுக்கு** உடைமையாளர்கள்.

★ ★ ★

### 10. இனியவை கூறல்

- எனக்கு இனிமையாம் சொல்லே பிறர்க்கும் இனிமையான சொல்லாம். எனக்கு இனிமையில்லாச் சொல் பிறர்க்கும் இனிமை இல்லாச் சொல்லே என உணர்ந்து பேசுகிறீர்களா, நீங்கள் வள்ளுவ **இனியவை கூறலுக்கு** எடுத்துக்காட்டானவர்கள்.

★ ★ ★

### 11. செய்ந்நன்றி யறிதல்

- எச்சிறு நன்றியை எவர் செய்யினும் அவர்க்கு நாம் நன்றி செய்யக் கடப்பட்டுள்ளோம் என்று உணர்ந்து போற்றும் உள்ளம் உங்களுக்கு இருந்தால் நீங்களே **செய்ந்நன்றி யறிதற்குச்** செவ்விய சான்றாளர்.

★ ★ ★

### 12. நடுவு நிலைமை

- செய்தவரை நோக்காமல், செய்த செயலையே நோக்கி, உள்ளவாறு மதிப்பிடக் கூடியவர்களா நீங்கள், இத்தகுதியமைந்த நீங்களே வள்ளுவ நடுவு நிலைமை நாயகர்கள். நயனார்ந்த நடுவுநிலைச் சொந்தங்கள்.

★ ★ ★

### 13. அடக்க முடைமை

- வாயடங்காமல் பேசுவான் முன்னரும், வாயடங்கிப் பொறுத்திருந்து அவனைப் புரியச் செய்ய முடியுமா? நீங்கள், வள்ளுவ **அடக்க முடைமையை** உங்களுள்ளே அடக்கிக் கொண்ட வாய்மைச் சொந்தக்காரர்கள்!

★ ★ ★

### 14. ஒழுக்கமுடைமை

- பிறந்த குடும்பமும் பெற்ற செல்வமும் கற்ற கல்வியும் எனக்குப் பெருமை தருவன என்றாலும், இவற்றினும் மேலாம் பெருமை தருவது ஒழுக்கமே எனக் கடைப்பிடியாகக் கொள்கிறீர்களா? வாருங்கள்; நீங்களே வள்ளுவ **ஒழுக்க முடைமைத்** தூண்கள்!

★ ★ ★

### 15. பிறன்மனை நயவாமை

- பிறன் ஒருவன் மனைவியைத் தாயாக, மகளாக, உடன்பிறப்பாகக் கொள்கிறீர்களா, பிறள் ஒருத்தியின் கணவனைத் தந்தையாக மகனாக உடன் பிறந்தானாகக் கொள்கிறீர்களா, வாருங்கள் நீங்களே வள்ளுவத்தின் **பிறன்மனை நயவாப்** பேராண்மைப் பேற்றாளர்கள்.

★ ★ ★

### 16. பொறையுடைமை

- ஒருவர் அறியாமையாலோ செருக்காலோ அடங்காச் செயலைச் செய்தபோதும் அதனைப் பொறுத்துக் கொள்ளவும் மறந்துவிடவும் மனம் உங்களுக்கு உண்டா. நீங்கள் வள்ளுவப் **பொறையுடைமைக்கு** நிறைவுடைமையாளர்.

★ ★ ★

### 17. அழுக்காறாமை

- இல்லாதவர்க்கு ஒன்றைக் கொடுக்கமுடியாமல் போனாலும் சரி, மற்றொருவர் அவர்க்குக் கொடுக்கும் போது தடுக்காத மனமாவது உங்களுக்கு உண்டா? உண்டெனின் நீங்கள் வள்ளுவ **அழுக்காறாமையை** அறமாக்கிக் கொண்டவர்கள்.

★ ★ ★

### 18. வெஃகாமை

- "எனக்கு உரிமை இல்லாப் பொருள் தெருவிலே கிடந்தாலும் எடுக்க மாட்டேன்" என்னும் மனக்கட்டு உடையவர்களா நீங்கள், வள்ளுவ **'வெஃகாமை'** க்கு வாழ்வாகி வந்தவர்கள்.

★ ★ ★

## 19. புறங்கூறாமை

- நேருக்கு நேர் சொல்வதே நேர்மை என்னும் அறத் தெளிவு உங்களுக்கு உண்டா? உண்டென்றால் நீங்களே வள்ளுவப் **புறங்கூறாமையைப்** போற்றப் பிறந்த பிறப்பாளர்.

★ ★ ★

## 20. பயனில சொல்லாமை

- "பயனில்லாத பேச்சைப் பேசவும் மாட்டேன்; ஒருவர் அப்படிப் பேசினாலும் கேட்கவும் மாட்டேன்" என்னும் மனநிலை உங்களுக்கு உண்டா? உண்டு எனின் வள்ளுவப் **'பயனில சொல்லாமை'**க்கு வாய்த்த மணிச் சான்று நீங்களே!

★ ★ ★

## 21. தீவினை அச்சம்

- பிறருக்குத் தீமை தரும் ஒன்றை நினைக்கவே உங்கள் மனத்தில் அச்சம் உண்டாகின்றதா, வேறென்ன வேண்டும்? அவ்வொன்றே வள்ளுவத்தின் **தீவினை அச்சப்** பிறப்பினராக நீங்கள் திகழ்பவர்கள் என்பதன் சான்று!

★ ★ ★

## 22. ஒப்புரவறிதல்

- காற்றைப் போல, ஒளியைப் போல, நீரைப் போல, நிலத்தைப் போல 'யான், இவர் அவர் எனப் பாராமல் பொதுமை வாழ்வு கொள்வேன்' என முடிவெடுத்து முன்னடந்தால் நீங்கள் தாமே வள்ளுவ **ஒப்புரவறிதலுக்கு** வரைந்து வைத்த நடைஓவியம்!

★ ★ ★

## 23. ஈகை

- பெற்ற வளமா கல்வியா வாய்ப்பா இவற்றால் தாம் அடையும் இன்பம் போலப் பிறரும் நலமும் இன்பமும் பெற உதவும் உள்ளம் இருப்பவர்களா நீங்கள். வள்ளுவ **ஈகை** வடிவினரே நீங்கள்!

★ ★ ★

## 24. புகழ்

- இல்லற வாழ்வுடையார்க் கெல்லாம் ஒரு நிறை நிலை, அழியாப் புகழுக்கு ஆளாதல்! அதனை அடைதற்குரிய வகையில், வாழ்வாங்கு வாழும் வாழ்வினரா நீங்கள்; வள்ளுவப் **புகழின்** வளரொளியாயவர் நீங்களே!

★ ★ ★

## 25. அருளுடைமை

- பற்றற்ற வாழ்வைப் பற்ற எண்ணுகிறீர்களா? ஆம்! அருளுடைமையைப் பற்றிக் கொள்ளுங்கள்! அன்புத் தாய் பெற்ற அருமைக் குழந்தை அருளே! அக்குழந்தையைப் போற்றுகிறீர்களா நீங்கள்; நீங்களே **அருளுடைமைக்குச்** சொந்தக்காரர்!

★ ★ ★

## 26. புலால் மறுத்தல்

- ஊனை உண்டு ஊனைப் பெருக்கச் செய்யும் எண்ணமோ உயிரை வாட்டும் வன்னெஞ்சமோ உங்களுக்கு இல்லையா, நீங்கள் உயிரெல்லாம் தொழத்தக்கவர். **புலால் மறுத்தலால்** தெய்வ நிலை பெற்றவர்!

★ ★ ★

## 27. தவம்

- தேவையைச் சுருக்கும் திடமுள்ளதா உங்களுக்கு; உங்கள் துயர் தாங்கும் உறுதி உள்ளதா உங்களுக்கு. பிற உயிர்களுக்குத் தீங்கெண்ணாத்திறம் உள்ளதா? உங்கள் கடமையை நீங்கள் தவறாது செய்யும் கட்டுப்பாடு உடையவர்களா? உங்களுக்கு மேற்பட வள்ளுவத் தவம் மேற்கொள்வார் எவரும் இலர்:

★ ★ ★

## 28. கூடா ஒழுக்கம்

- இதைச் செய்யாதே என்று மனச்சான்று இடிக்கிறதா? அதனைக் கட்டாயம் செய்யேன் என்னும் கட்டமைதி நீங்கள் கொள்கிறீர்களா?

நீங்களே வள்ளுவர் கூறும் **கூடா ஒழுக்கம்** கூடாமல் வாழும் வளவாழ்வினர்!

★ ★ ★

## 29. கள்ளாமை

- என் உழைப்பால் தேடிய உரிமைப் பொருளையன்றி அயலார் பொருளை யான் அவாவேன் (விரும்பேன்) என்னும் நெஞ்சம் உங்களுக்கு உண்டா? நீங்களே வள்ளுவர் கூறும் **கள்ளாமை** போற்றும் பெருமையர்.

★ ★ ★

## 30. வாய்மை

- பிறர்க்குத் தீமையாவதை நினையேன். பிறர்க்குத் தீமையாவதை மறந்தும் யான் சொல்லேன். மெய்யாகவே இருந்தாலும் அம்மெய்யைச் சொல்வதால் பிறர்க்குத் தீமை ஏற்படும் என்றால் அதனைக் கூறமாட்டேன் என்று முடிவு கொண்டவர்களா நீங்கள்? நீங்கள் பாராட்டத்தக்க வள்ளுவ **வாய்மையர்!**

★ ★ ★

## 31. வெகுளாமை

- சினமுறத் தக்க இடம், பழித்துரைப்பார் பக்கம், இடித்துக் கூறுவார் முன்னர், தூண்டி விடுவார் சூழல் எனினும், எழும்பிய சினத்தை எண்ணிப் பார்த்து உங்களை அடக்கிக் கொள்கிறீர்களா? நீங்கள் வள்ளுவர் கூறும் **வெகுளாமை** போற்றி உங்களையும் உங்கள் குடியையும் காத்துக் கொள்பவர்கள்!

★ ★ ★

## 32. இன்னா செய்யாமை

- தீமைக்குத் தீமை; வசைக்கு வசை; அடிக்கு அடி - என்னும் ஆகாவழியை அறவே வெறுக்கிறீர்களா? அஃது, ஆக்காது இருபக்கமும் நன்மை என உணர்கிறீர்களா? நீங்களே வள்ளுவர் சொல்லும் **இன்னா செய்யாமையை** இனிதில் போற்றிக் காப்பவர்கள்!.

★ ★ ★

## 33. கொல்லாமை

- பொய்யனும் அப்பொய்க்குக் கழுவாய் தேடிக் கொள்ளலாம், மெய்யே கூறுதலால்!

  பொறாமையனும், பிறர் நலம் பாராட்டும் தன்மையால் தன்பழியைத் துடைக்கலாம்.

  ஆனால், கொலை செய்தான் ஒருவன் அக் கொலையை உணர்ந்து திருந்தினாலும், அக்கொலை கொலையே! மீள உயிர்வரப் போவதில்லை என்பதை மெய்யாக உணர்ந்து வாழ்பவர்களா நீங்கள், நீங்களே வள்ளுவர் கூறும் **கொல்லாமைக்** கொள்கை மேலோர்.

★ ★ ★

## 34. நிலையாமை

- உலகம் மாறுதல் தன்மையது; பொருள்களுள் மறைதல் தன்மையின மிகுதி. இவற்றின் இடையே மாறாமல் மறையாமல் நிற்பனவும் உண்டு என்னும் மெய்யறிவு உடையவராய் அமைந்து வாழ்பவர்களா நீங்கள், நீங்களே வள்ளுவர் கூறிய **நிலையாமையைத்** தெளிவாய் உணர்ந்து நிலைக்க வழிகண்டவர்கள்!

★ ★ ★

## 35. துறவு

- தேவையற்றவற்றை ஒவ்வொன்றாக வேண்டா, வேண்டா என விலக்கி, அவ்விலக்கியவற்றால் குறைவு உணராமல் நிறைவு உணர்ந்து அவ்வேண்டாமையே வேண்டும் செல்வம் எனப் போற்றுபவர்களா நீங்கள், நீங்களே வள்ளுவர் கண்டு காட்டிய மெய்த் **துறவினர்.**

★ ★ ★

## 36. மெய்யுணர்தல்

- சொல்லப்படுவன எல்லாம் மெய்யானவையும் அல்ல; பொய்யானவையும் அல்ல;

  காணப்படும் பொருள்கள் எல்லாம் நாம் அறிந்த தன்மை மட்டுமே யுடையவையும் அல்ல; எவராலும் அறியாத் தன்மை யுடையவையும் அல்ல;

இவற்றுள் எல்லாம் ஊடகமாய் அமைந்த மெய்ம்மையை அறிவதே அறிவு என்னும் ஆழமான எண்ணமுடையவர்களா நீங்கள், நீங்களே வள்ளுவர் காட்டும் **மெய்யுணர்வாளர்.**

★ ★ ★

## 37. அவாவறுத்தல்

- தாவித்தாவி ஓடுவதும், மேலே மேலே பறப்பதும் கொண்டதை விடுத்துக் கொள்ளாததை எடுக்க உந்துவதும் ஆகிய உணர்வைத், தலை காட்டவோ கால் நீட்டவோ கண்ணசைக்கவோ விடாமல் ஒடுக்குதல் உங்களுக்கு வழக்கமாகிப் போனதா, நீங்களே **அவாவறுத்து** வள்ளுவர் வழியில் செம்பொருள்கண்டு பேரா இயற்கை உற்றவர்கள்!

★ ★ ★

## 38. ஊழ்

- உயிர்களுக் கெல்லாம் பொதுவறமாக அமைந்ததும் உலகியற்கை எனப்படுவதாய், மாறாத் தன்மையதாய் நிலைப்பதும் ஆகியதே ஊழ்! உயிர்களின் விருப்பம், வேண்டல், செயற்பாடு இன்னவைக்கு ஆட்படாமல் விருப்பு வெறுப்பு உயிர்ப்பு இறப்பு அற்றதாய் ஓர் ஒழுங்கு முறைக் கடனாற்றும் இயற்கையே ஊழ் எனத் தேர்ந்து துணிவீர்களா நீங்கள்; நீங்களே வள்ளுவர் வழியில் **ஊழியல்** கண்டவர்கள்.

★ ★ ★

# உ. பொருட்பால்

## 39. இறைமாட்சி

- நாட்டுத் தலைவனுக்கு எவ்வெப் பண்பும் திறமும் இருக்க வேண்டுமோ, அவ்வளவும் வீடடுத் தலைவனுக்கும் ஊராளி முதலியவர்க்கும் வேண்டும் என்று உங்கள் வாழ்வை அமைத்துக் கொள்கிறீர்களா, நீங்கள் வள்ளுவர் கண்ட **இறைமாட்சித்** தூண்களுள் ஒருவர்! வள்ளுவ இறைமாட்சி மூலவர்!

★ ★ ★

## 40. கல்வி

- கற்பேன்; கற்கத் தக்கவை கற்பேன்; கற்பதில் பிழையில்லாது கற்றதுபோல் வாழ்விலும் பிழையில்லாது இருக்குமாறு கற்பேன்; கற்றபடி நிற்பேன்; உலகவர் அனைவரும் எம் உறவினர் என்று உணர்ந்து யான் கற்ற கல்வியால் யான் அடையும் இன்பம் போல் பிறரும் இன்புற வேண்டும் என்னும் மேன்மையர் நீங்கள் எனின், நீங்களே வள்ளுவர் கண்ட கேடில் செல்வமாம் கல்விக்கு உரியவர்.

★ ★ ★

## 41. கல்லாமை

- கற்றவர் மக்கள்; கல்லார் விலங்கு போன்றவர்; கல்லார் எவரும் இல்லை என்னும் நிலைமை வீட்டிலும் நாட்டிலும் ஏற்பட ஏற்றவை எல்லாம் செய்வேன் என்னும் கிளர்ச்சியினரா நீங்கள், நீங்களே வள்ளுவர் வழியில் **கல்லாமை** ஒழிக்கப் பிறந்த நல்ல பிறவியர்

★ ★ ★

## 42. கேள்வி

- நீர்வேட்கை தீர்க்க நீரைத் தேடிப் பெறுவது போல்வும் பசி வேட்கை ஒழிக்க உணவைத் தேடி அடைவது போலவும் நல்ல செய்திகளைத் தக்கோரிடத்தே கேட்டுப் பெறுவதற்கு எப்பொழுதும் தீரா வேட்கையுடன்

இருக்கிறேன் என்னும் ஆர்வலரா நீங்கள், நீங்களே வள்ளுவர் சுட்டிக் காட்டிய **கேள்விச்** செல்வர் ஆவீர்.

★ ★ ★

## 43. அறிவுடைமை

- அழிவின்றிக் காக்கும் கருவி அறிவு.
  தீய வழியை விலக்கி நல்ல வழியில் செலுத்துவது அறிவு.
  எவர் எதைச் சொன்னாலும் அவற்றில் மெய்ம்மையைக் காண்பது மட்டுமே அறிவு.

  எல்லா நலங்களும் உடையவராக நிறைவு கொள்ளச் செய்வது அறிவு – என்பவை உங்கள் கொள்கைகள் என்றால், நீங்களே வள்ளுவர் விரும்பிய **அறிவுடைமையர்.**

★ ★ ★

## 44. குற்றங்கடிதல்

- பிறர் குற்றம் பார்க்கிறீர்களா? பாருங்கள்; ஆனால் அதற்கு முன் உங்கள் குற்றத்தைப் பார்த்துக் கொண்டீர்களா? அது தானே முறைமை! உங்கள் குற்றத்தைப் பார்க்கும் பார்வை உண்டாகிவிட்டால் பிறர்குற்றம் கண்டு புண்படுத்த மாட்டீர்களே, பண்படுத்த அல்லவோ செய்வீர்கள்! அப்பொழுது நீங்கள் தாமே வள்ளுவர் வழியில் குற்றம் கடிபவர்கள்.

★ ★ ★

## 45. பெரியாரைத் துணைக் கோடல்

- நீங்கள் பெரியவர் என மதித்துப் போற்றப்படுபவர்கள். ஆனால், நீங்களோ உங்களுக்கும் பெரியர் இவர் என மதித்துப் போற்றி வாழ்கிறீர்கள். இதுவே பெருமை என்றும் வலிமை என்றும் கடைப்பிடியாகக் கொள்கிறீர்களா? மெய்யாகவே நீங்கள் வள்ளுவர் ஆணைப்படி **பெரியாரைத் துணைக் கொண்ட வலியவருள்** வலியவர்.

★ ★ ★

### 46. சிற்றினம் சேராமை

- சிலர் பேச்சைக் கேட்க உங்களுக்கு அருவறுப்பாக இருக்கிறதா? சிலரோடு பழகுதல் பழிக்கு ஆளாக்கும் என அஞ்சுகிறீர்களா? சிலரைப் பார்க்கவே கூடாதென ஒதுக்குகிறீர்களா? ஒதுங்குகிறீர்களா?

  இவை யெல்லாம் உங்களுக்கு நீங்களே உண்டாக்கிக் கொள்ளும் தற்காப்புகள். இவற்றில் நீங்கள் கொண்ட உறுதிப்பாடே வள்ளுவர் சுட்டும் சிற்றினம் சேராமை போற்றும் ஆற்றலாளர்கள் என்பதன் எடுத்துக்காட்டு.

★ ★ ★

### 47. தெரிந்து செயல்வகை

- செய்ய வேண்டியதைச் செய்யத் தவறமாட்டேன். செய்ய வேண்டாததைச் செய்யவும் மாட்டேன். இதனைச் செய்தல் என் தகுதிக்குத் தகாது. என்னும் எண்ணத்தோடு செயல்படுகிறீர்களா? நீங்கள் தாம் வள்ளுவத் தோன்றல், தெளிந்து கூறிய தெரிந்து செயல்வகைத் தேர்ச்சியாளர்!

★ ★ ★

### 48. வலியறிதல்

- உங்கள் வலிமையை அளவிடுகிறீர்களா?

  நீங்கள் செய்ய விரும்பும் செயலை அளவிடுகிறீர்களா? அச்செயலைச் செய்தற்கு வரும் இடையூறுகளை அளவிடுகிறீர்களா? அத்தடையை உடைத்தெறியும் உறுதியில் செயல்படுகிறீர்களா? ஆம்! நீங்கள் வள்ளுவர் வகுத்த **வலியறிதல்** வெற்றியர்களே!

★ ★ ★

### 49. காலம் அறிதல்

- காலம் அறிதல் என்பது எடுத்த செயலை முடிக்கத் தக்க கால நிலையை அறிதலே ஆகும். அதனை அறிந்து முடிவு செய்து உரிய பொழுதில் உரிய வகையால் முடிப்பதே அல்லாமல், கணியரைப் பார்த்துச்

செயல்படுவது இல்லை என்னும் தெளிவினரா நீங்கள்; உறுதியாகவே நீங்கள் வள்ளுவம் கூறும் **கால மறிதல்** வல்ல வல்லாளர்களே ஆவீர்.

★ ★ ★

## 50. இடமறிதல்

- எண்ணுவேன்; நன்றாக எண்ணுவேன். எத்தனை வகையால் எண்ண வேண்டுமோ அத்தனை வகையாலும் எண்ணுவேன். எண்ணியதை உரிய இடத்தில் செய்து முடிப்பேன். எனக்குள்ள ஈடிணையில்லாத் துணை எனக்குள்ள அஞ்சாத் துணிவே என்னும் திட்பமுடையவர்களா நீங்கள், நீங்களே வள்ளுவர் சாற்றிய **இடனறிதல்** போற்றி வாழும் வாழ்வர்.

★ ★ ★

## 51. தெரிந்து தெளிதல்

- தொழில் துணையாக ஒருவரைக் கொள்ள விரும்புகிறீர்களா? அவர்களை உறவினர் என்றோ நண்பர் என்றோ பரிந்துரையுடையவர் என்றோ அறிவுமிக்கார் என்றோ முடிவு எடுக்காமல், அவர்தம் செயல் திறம், நல்லுளம் என்பன கொண்டே முடிவு எடுப்பீர்களா? நீங்களே வள்ளுவம் போற்றும் **தெரிந்து தெளிதல்** தேர்ச்சியர்!

★ ★ ★

## 52. தெரிந்து வினையாடல்

- தொழிலுக்குத் தக்காரைத் தேர்ந்து விட்டோம் என எண்ணி எல்லாமும் அவரையே நம்பித் தொழிலை விட்டு விடாமல் கண்காணித்தலும், கண்காணித்தலை அன்றி இடை இடையே தலையிட்டும் ஐயுற்றும், செயல்தடை செய்யாமலும் உடனாகிப் போற்றி வருகிறீர்களா, நீங்களே வள்ளுவர் தெளிந்த, **தெரிந்து வினையாடல்** தேர்ச்சியாளர்!

★ ★ ★

## 53. சுற்றம் தழால்

- அன்புமிக்க சுற்றத்தை அரவணைக்கிறீர்களா, அளவளாவி அமைந்து அவர்களோடு உறவு கொள்கிறீர்களா, இயன்ற அளவு கொடுத்தலும்

இனியவை கூறலும் மேற்கொள்கிறீர்களா, செல்வம் பெற்ற பயன் இச்சுற்றம் சூழ இருத்தல் என மகிழ்கிறீர்களா, மெய்யாகவே நீங்கள் வள்ளுவர் கூறிய சுற்றம் தழாலுக்கு வாய்த்த சான்றாளர்கள்.

★ ★ ★

## 54. பொச்சாவாமை

- நல்லது செய்தாரை மறக்க மாட்டீர்களா? நன்றி புரிந்தாரை மறக்க மாட்டீர்களா? பாராட்டும் செயல்களை மறவாமல் செய்வீர்களா? தற்பெருமையால், செய்யும் கடமைகளை மறக்க மாட்டீர்களா? நீங்களே வள்ளுவர் கூறிய **பொச்சாவாமை** போற்றும் (மறதி இல்லாமை காக்கும்) புகழாளர்கள்!

★ ★ ★

## 55. செங்கோன்மை

- எச் செயலையும் ஒருபக்கம் சாயாமல் செய்வீர்களா?
எச்செயலையும் நன்றாக ஆராய்ந்தே செய்வீர்களா?
இவர் மிக நெருங்கியவர், இவர் அயலார், இவர் பகைவர் என எண்ணாமல் நடுநிலை பேணிச் செய்வீர்களா? உங்கள் குறைக்கோ பிறர் குறைக்கோ இடந்தர மாட்டீர்களா?
நீங்களே வள்ளுவர் வகுத்த **செங்கோன்மை** வடிவினர்.

★ ★ ★

## 56. கொடுங்கோன்மை

- தலைமைப் பொறுப்பு வாய்த்தது; என்னைத் தட்டிக் கேட்க எவராலும் முடியாது; என்குறையை எடுத்தோத எவருக்கும் உரிமையில்லை; அவர்கள் தம் குறைசொல்லவும் அறவே இடம் கிடையாது என்னும் தடிப்பு உங்களுக்கு ஏற்படாதா, நீங்களே வள்ளுவர் கண்ட **கொடுங்கோன்மையை** ஏறிட்டும் பார்க்க வைக்காதவர்கள்!

★ ★ ★

## 57. வெருவந்த செய்யாமை

◆ நடுவுநிலை பேணுவீர்களா? தண்டிக்கும் கண்டிக்கும் இடங்களிலும் இயன்ற அளவு கனிவு காட்டுவீர்களா? கண்டு பேச எவருக்கும் இடம் தருவீர்களா? எந்த முடிவு எடுக்கு முன்னரும் தக்கவரைக் கலந்து பேசுவீர்களா? தகுதி இல்லார் கூட்டம் சுற்றியிருக்க இடம் தர மாட்டீர்களா? நீங்கள் செம்மையான செயல் மிக்கவர்; **வெருவந்த செய்யாமை** என்னும் வள்ளுவ வாக்குக்கு வாய்த்த எடுத்துக் காட்டாளர்!

★ ★ ★

## 58. கண்ணோட்டம்

◆ உங்களுக்கு விருப்பம் தராதது என்றாலும், உங்களால் ஒத்துக் கொள்ள முடியாதது என்றாலும், இது நலமாக எனக்கு இராது என உங்களுக்குத் தோன்றினாலும் அவற்றை யெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, உறவுக்காகவும் உயரிய நட்பு, அன்பு ஆகியவற்றுக்காகவும் ஒத்துப் போகிறீர்களா, பெருமைக் குரியவர்களே! நீங்கள், வள்ளுவர் உரைத்த **கண்ணோட்டக்** கழிபெருங் காரிகையர்! (காரிகை – அழகு)

★ ★ ★

## 59. ஒற்றாடல்

◆ ஓர் உண்மையைக் கண்டுபிடிக்க முனைகிறீர்களா?
ஒரு முறைக்கு இருமுறை எண்ணிப் பார்க்கிறீர்களா?
ஒருவருக்கு இருவர் மூவர் எனக் கேட்டுத் தெளிகிறீர்களா?
அவர்களையும் ஒருவர் அறியாமல் ஒருவர் கருத்துக் கூறச் சூழல் அமைத்துக் கொள்கிறீர்களா? நீங்கள் வள்ளுவர் கூறிய தேர்ந்த **ஒற்றாடல்** வல்லவர்கள்!

★ ★ ★

## 60. ஊக்கமுடைமை

- உடலில் ஊக்கம் இல்லை; ஊக்கம் உள்ளத்தில் உள்ளது. உள்ளத்தின் ஊக்கம் உயர உயர வாழ்வும் வெற்றியும் உயரும் என உறுதி கொள்கிறேன். வெள்ளம் (நீர்) உயர உயர உயரும் நீர்மலர் போல நானும் என் உள்ளத்தால் உயர்வேன் என வாழ்கிறீர்களா? நீங்களே வள்ளுவ **ஊக்கமுடைமை** வாழும் திருநிலையம்.

★ ★ ★

## 61. மடியின்மை

- மடி என்பது என்ன? சுருங்குவது; மடிந்து மட்கிப் போகச் செய்வது; என் குடியை உயர்த்தத் துணிந்தேன்; மடிவு கொள்ளேன்; இன்று செய்யும் செயலை நாளை எனத் தள்ளேன்; மறதி கொள்ளேன்; சோம்பிக் கிடவேன்; கண்ணுறங்கிக்கிடந்து கடமை மறவேன் என்னும் முடிவு கொண்டவர்களா நீங்கள் வாருங்கள்; நீங்களே வள்ளுவர் வடித்த **மடியின்மைக்கு** எடுத்துக்காட்டான தோன்றல்கள்.

★ ★ ★

## 62. ஆள்வினை உடைமை

- யான் ஆணா? பெண்ணா? பிள்ளையா?
உறுப்புக்குறையா? இல்லாமையா? – எப்படி இருந்தால் என்ன?
யான் ஆள்! என் ஓயா ஒழியாக் கடமையே என் ஆள்வினை, யான் ஆளாகப்பிறந்த பிறவிக்கடன் என்று திட்டமாக வீறு நடையிடுகிறீர்களா? நீங்களே வள்ளுவ **ஆள்வினை யுடைமையின்** வாழ்வியல் விளக்கங்கள்!

★ ★ ★

## 63. இடுக்கண் அழியாமை

- இடுக்கண் என்பது என்ன? தப்பிக்கொள்ள முடியாமல் தொடர் தொடராக வரும் தொல்லை, துயர், அல்லல். வெள்ளப்பெருக்குப் போல் துயரம் தொடர்ந்தாலும் அவ்வெள்ள அழிவையும் தாங்கி வெற்றிகாணும் உள்ளம் என்னும் பேரணை என்னிடத்துள்ளது

என்னும் துணிவு உங்களுக்கு உண்டா? வாருங்கள், உயரிய துணிவர்களே! நீங்களே வள்ளுவ **இடுக்கண் அழியாமைக்கு** வாய்த்த கட்டுமானங்கள்!

★ ★ ★

## 64. அமைச்சு

- நாட்டாட்சிக்கு மட்டுமா அமைச்சு? வீட்டாட்சிக்கு வேண்டுவது இல்லையா? ஒவ்வொருவர் தனிவாழ்வுக்கும் அமைச்சு நிலை உண்டு தானே! கருவி, காலம், செயல் என்பவை எவருக்கு வேண்டா! தெரிதலும் தேர்ந்து செயலும் எவருக்கு வேண்டா! செயற்கைகளை அறிவதுடன் உலகத்து இயற்கை அறிதலும் கட்டாயத் தேவை தானே! இவற்றை விரும்பித் தேடுகிறீர்களா? நீங்களே வள்ளுவர் கண்ட **அமைச்சர்!**

★ ★ ★

## 65. சொல்வன்மை

- வில்லம்பும் அம்பே! சொல்லம்பும் அம்பே! முன்னது தீமை ஆக்க உருவாயது! பின்னது நலமாக்கல் நோக்கில் பிறந்தது. சொல் என்பது நெல். நெல்லின் பயன் உயிர்! சொல்லின் பயன் உணர்வு! சொல்வன்மை, பள்ளிக்கும் வேண்டும்; பாராளவும் வேண்டும்! நீங்கள் சொல்வன்மைச் சுவைஞரா! பொழிஞரா? வழிஞரா? நீங்கள் எவராயினும் வள்ளுவச் சொல்வன்மையின் வரிசைக் குரியவர்!

★ ★ ★

## 66. வினைத்தூய்மை

- வினையாவது செயல்; செயலில் தூய்மை என்றால் தூய்மையின் தோற்றம் மனத்திலே; அதன் விளக்கம், சொல்லிலே; வெற்றிப்பாடு செயலிலே; வினைத் தூய்மை பேணுபவராக நீங்கள் இருந்தால் போதும்! எனைத் தூய்மையும் (எல்லாத் தூய்மையும்) பேணுபவர் நீவிரே! நீவிரே **வினைத் தூய்மையால்** கழுவாய் தேடி அலைய வேண்டாத வழுவிலா வள்ளுவப் பிறப்பர்!.

★ ★ ★

## 67. வினைத்திட்பம்

- வினைத் திட்பம் என்பது எதில் உள்ளது? மனத்திட்பம் என்பதிலே தான் வினைத்திட்பம் உள்ளது. எதிரீட்டைப்பொருட்டாக எண்ணுபவன் வினைத்திட்பன் ஆகான். நினைத்ததை நினைத்தவாறு முடித்துக் காட்டும் மலையா நிலையன் எவனோ அவனே **வினைத்திட்பன்** என்னும் வள்ளுவ விருதுக்கு வாய்த்தவன். அவன் என்றால் அவள் இல்லையா? அவளும் தான்!

★ ★ ★

## 68. வினைசெயல்வகை

- பொருள், கருவி, காலம், வினை, இடம் என்னும் ஐந்தும் வினை செயல் வகை என்னும் கையின் ஐவிரல்கள். இவ்விரல்கள் வெறும் விரல்களா? வீறு மிக்க விறல்கள்! வினை செயல் வல்லான், இன்னொரு செயல் வல்லானைப் பயன்படுத்திக் கொள்வான். எடுத்த செயலால் தொடுத்த பல செயல்களைச் செய்து முடிப்பான். அத்தகைமை உங்களுள் உந்தி எழுகின்றதா? நீங்கள் வள்ளுவ **வினை செயல் வகை** வயிரத் தூணங்கள்!

★ ★ ★

## 69. தூது

- எது சொல்ல வேண்டும் என்று விடுக்கப்பட்டாரோ அது மாறாமல் மயங்காமல் கூறுவதே தூது. 'வழி மொழிதல்' என்பது வள்ளுவர் படைத்த கலைச்சொல். அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை, தோற்றப்பொலிவு, துணிவு என்பவையுடையான் தூதுவல்லான். நாட்டுக்குரிய நல்ல தூது, ஊருக்கும் வேண்டும்; உறவுக்கும் வேண்டும். அவற்றில் கருத்து வைத்துக் கடனாற்றும் கனிவு உங்களுக்கு உண்டானால், நீங்களே வள்ளுவர் வரைந்து காட்டிய வாய்த்த **தூது**ராம்!

★ ★ ★

## 70. மன்னரைச் சேர்ந்தொழுகல்

- மன்னர் இருந்த இடத்தில் இந்நாளில் குடியரசுத் தலைவர் உள்ளார். சிற்றரசர் போல ஆளுநர் உள்ளார். பெயர் மட்டும் வேறு; தேர்ந்து கொள்ளும் முறைவேறு. ஆனால், பொறுப்பும் ஆட்சியும் அவையே. ஆள்வோரை மிக நெருங்காமை, மிக அகலாமை என்பவை போற்றிக் கடனாற்றல் வேண்டும். உரிமை, பழமை எனப்பாராட்டி அவரைப் பயன் கொள்ள முனைதல் பழிக்கு இடமாம். பதவியை மதித்து அதற்குத் தக நெருங்கிக் கடனாற்றல் வேண்டும். ஊர்த்தலைவரிடமும் தொழில் தலைவரிடமும், அமைப்புத் தலைவரிடமும் இவற்றைப் பேணித்தானே நடத்தல் வேண்டும். **இந்நடையுடையார்** வள்ளுவ வழியர்!

★ ★ ★

## 71. குறிப்பறிதல்

- சொல்லால் சொல்லாமலே உள்ளகத்தில் அறிதல் குறிப்பறிதலாம். அகத்தைக் காட்டும் கருவி முகமே; மேலும், கண்ணால் அறியாச் செய்தி இல்லை. குறிப்பறியவல்லார் தொடர்பு அத்திறத்தை மேலும் சிறக்கச் செய்யும். பொது வாழ்வு, குடும்பவாழ்வு தனிவாழ்வு என்பவற்றுக் கெல்லாம் இன்றியமையாத திறம் குறிப்பறிதலாகும். குறிப்பறிய வல்லாரே குறிகாரர், கோடாங்கியர், சோதிடர். அவற்றை அவர்கள் காசுக்குச் செய்கின்றனர். ஆனால் வாழ்வுக்குக் கொள்ளல் நமக்குக் கட்டாயத் தேவையாம். இதனைக் கொள்ளும் வேட்கையினரா நீவிர்! ஆம் எனின் வள்ளுவர் வழிக் **குறிப்பறிதல்** வல்லார் நீவிரே ஆவீர்.

★ ★ ★

## 72. அவையறிதல்

- நான்கு பேர்களும் அவையே! நாலாயிரம் பேரும் அவையே. ஏன்? ஒன்றல்ல பல என்பது தமிழ் நெறி. இரண்டும் அவை எனின், எண்ணமே யன்றி எண்ணிக்கை பார்க்க இடமில்லையே! அவையை அறிந்தார் சொல்லாமல் செய்துள்ள நலப்பாடுகள் காவியங்களால் –

வரலாறுகளாய்த் திகழ்கின்றன. சொல்லும் இடம், சொல்லக் கேட்பார் நிலை என்பவற்றை அறிந்து சொல்லும் வகையால் சொல்வார் வான் மழை பொழிந்ததனையர். அவையறிந்துரைக்கும் ஆர்வமும் ஆற்றலும் உங்களுக்கு உண்டு எனின் நீவிர், வள்ளுவர் வகுத்த **அவையறிந்து** சிறக்கும் அருமையர் என்பது கண் கூடாம்!

★ ★ ★

### 73. அவையஞ்சாமை

- நீங்கள் கற்றவர்களா? கற்றதைத் தெளிவாகக் கற்று மனத்தும் கொண்டவர்களா? பிறர்க்கு எடுத்துரைக்கும் ஆற்றலைப் பெற்றவர்களா? பின் என்ன? உங்களுக்குத் தெளிவாகத் தெரிந்ததை அவையில் கூற ஏன் நீங்கள் அஞ்ச வேண்டும்! அஞ்சாத உரையாளர் எனின் நீங்களே வள்ளுவர் கூறும் **அவை அஞ்சாமைக்கு** எடுத்துக் காட்டாளர்.

★ ★ ★

### 74. நாடு

- நாடு என்பது விரும்பு என்னும் பொருளது. நாடு என்பது மண்ணா, கல்லா, மரமா, மாழையா! மக்கள் வாழும் வாழ்வின் தகைமையே நாடாம்! ஒவ்வொருவரும் 'நான் நாடு; என்வாழ்வு நாடு' என்று ஆகிவிட்டால் அதுவே நாடு! விளைவு பெருகும்; தக்கார் இருப்பார்; பசி இல்லாகும்; பகை இல்லாகும்; அரசையழிக்கும் கொல் குறும்பு தோன்றா; 'நான் நானல்லன்; நானே நாடு' என உணர்கிறீர்களா? நீங்களே வள்ளுவர் கண்ட **வளநாடு**!

★ ★ ★

### 75. அரண்

- அரண் என்பது பாதுகாப்பு; மலையோ கடலோ கோட்டையோ பாதுகாப்பா நாட்டுக்கு? பாதுகாப்பார் இல்லாமல் பாதுகாப்பு என்பது என்ன செய்யும்? எல்லாப் பொருளும் இருந்தென்ன? நல்ல ஆள் வேண்டுமே! எல்லாச் சிறப்பும் இருப்பினும், வினைச் சிறப்புடையார்

வேண்டுமே! நீங்கள் நல்ல ஆளா? வினைச் சிறப்பு உடையரா? அயற்பகை நாட்டுக்கு வாரா? உட்பகையும் தோன்றா! நீங்களே அரண் என நிற்கும் ஒன்று உண்டானால், வள்ளுவர் கண்ட **அரசரண், நாட்டரண்** நீங்களே ஆவீர்!

★ ★ ★

### 76. பொருள்செயல்வகை

◆ பொருள் உளதா? உங்களைப் பொருட்டாக எவரும் மதிப்பர். பொருளின் மதிப்பே உங்கள் மதிப்பாகி விடுகின்றது. பொருளே அறம்; பொருளே இன்பம்; பொருளே வலிமை; பொருளே ஒளி. பொருளே அருள்வளர் செவிலி. ஆதலால், 'செய்வேன் பொருளை' எனத் தேர்ந்து கடமை புரிகிறீர்களா, நீங்களே வள்ளுவர் கண்ட **பொருள் செயல் வகையைப்** போற்றிவாழும் புகழ்ப் பிறவியர்

★ ★ ★

### 77. படைமாட்சி

◆ 'படை குடி' என்பது பொருட்பால் தொடக்கச் சொற்கள் 'படை குடி' யைக் 'குடிபடை'யாகக் கொண்டது பண்டைத் தமிழக அரசுகள். அக் குடிபடையாக விளங்கும் எண்ணமும் எழுச்சியும் ஏறார்ந்த செயற்படும் உடையவர்களா, களப்போராளி போலக் குடும்பவாழ்வையும் முன்னெடுத்துச் செல்லும் வீறு உடையவர்களா நீங்கள், வள்ளுவர் கண்டதாகிய வெற்றியன்றித் தோல்வி அறியாப் **படைமாட்சியர்** நீவிரே.

★ ★ ★

### 78. படைச் செருக்கு

◆ செருக்கு = பெருமிதம். போராளிகளின் பெருமிதம் படைச் செருக்கு. கொள்ளை கொலை அல்ல படைச் செருக்கு! மண்காத்தல், மக்களைக் காத்தல், மற்றை உயிர்காத்தல் பற்றிய தன்னலமற்ற ஈகத்தின் வெளிப்பாடே படைச்செருக்காம். இத்தகைய ஈகம் புரிந்தாலும் புரிக; ஈகம் புரிவாரை மதித்தல் அளவிலேனும் உங்களுக்கு உணர்வு

உண்டா? அவ்வாறானால் நீங்கள் வள்ளுவர் கண்ட **படைச் செருக்கில்** பங்கு கொள்பவர்களேயாம்.

★ ★ ★

## 79. நட்பு

- நள் = நெருக்கம், செறிவு. நட்பு, பிரிவரிய கூட்டுறவு. அகப்பொருட்காதலில் பால்வேறுபாடு உண்டு. நட்புக்காதல் பால்வேறுபாடு அற்றது. சிரித்துப் பேசுதற்காக நட்பு இல்லை; தொட்டுப் பழகுதற்காக நட்பு இல்லை. தக்க இடத்தில் இடித்துச் சொல்வதும் நட்பே என்பதை ஏற்றுக் கொள்பவர்களா நீங்கள். இன்ப துன்பங்களல், அவரவர் கைபோல் இருந்து கடமை புரிவீர்களா? நீங்கள் வள்ளுவர் வகுத்த வளமான **நட்பின்** கொள்கலம் ஆயவர்கள்.

★ ★ ★

## 80. நட்பாராய்தல்

- எண்ணிப்பாராத நட்பு எல்லா இன்னல்களுக்கும் இடம். எண்ணிப் பார்த்துத் தக்கதெனக் கொண்ட நட்புக்கு ஒப்பு அந்நட்பே. குடிப்பிறந்தவர், குற்றத்தின் நீங்கியவர், பழிக்கு நாணுபவர் நட்பாக வாய்த்தால் அப்பேறே பேறு. வறுமை, துன்பம், சிக்கல் என்பவை உண்டாகின்றனவா, அவற்றாலும் நலம் உண்டு. உண்மை நண்பர் இவரெனக் கண்டுகொள்ள வாய்த்த நலம் அது. இவற்றை ஏற்கும் உள்ளம் உங்களுக்கு உண்டா? நீங்கள் வள்ளுவர் வகுத்த **நட்பாராய்தல்** சான்றாளர்.

★ ★ ★

## 81. பழைமை

- பழைமையாவது பரம்பரை, பரம்பரையாகத் தொடரும் நட்புரிமை. கெழுதகைமை என்பது அது. தம் நட்பாயவர் பற்றிப் பிறர் குறை கூறினாலும் அதற்குச் செவிசாய்த்து மாற்றிக் கொள்ளாத மாண்பினது. அழிவந்த செய்தாலும் அன்பின் வழிவந்த கேண்மை மாறாதவர். இத்தகைய நட்பு உங்கள் நெஞ்சைத் தொடுகிறதா?

உங்களை அவ்வண்ணம் இருக்கத் தூண்டுகிறதா? அவ்வாறானால் வள்ளுவர் தேர்ந்து தெளிந்து காட்டிய **பழைமைக்**காதலர் நீங்களேயாம்.

★ ★ ★

## 82. தீ நட்பு

- தேவைப்படின் நட்பாக இருந்து, தேவை நீங்கியதும் விலகியோடும் உறவுமாறிகளை வெறுக்கிறீர்களா? அவர்கள் நட்பைக் கொள்ளல் ஆகாது எனத் தள்ளுகிறீர்களா? சொல்வேறு செயல்வேறு என்றும், மன்றத்தில் ஒன்று மனைக்குள் ஒன்று என்றும் உள்ள நட்புப் போலியாக வாழ்வாரை நினைத்தும் பார்க்க மாட்டீர்களா? நீங்கள் வள்ளுவம் காட்டும் **தீ நட்பு**ணர்ந்து விலக்கிக் காக்கும் திருவாளர்கள் ஆவீர்.

★ ★ ★

## 83. கூடா நட்பு

- ஒட்டுவது போல் ஒட்டி நின்று வெட்டுவார், நெருக்கம் போல் வந்து நெடுங்கேடு செய்வார், அழிக்கும் வகையைத் தேடியே அணுகி வந்தார். கும்பிட்டுக் கொண்டே கொன்றுவிடத் திட்டமிடுவார். ஆயோரைக்காணக் கூடாது, நெருங்கக் கூடாது பேசவும் கூடாது என முடிவு செய்து அதன்படி வாழ்பவர்களா நீங்கள், வள்ளுவர் கண்டு காட்டிய **கூடா நட்பை** உணர்ந்து உய்யும் உயர் நெறிகண்டவர்கள் ஆவீர்.

★ ★ ★

## 84. பேதைமை

- பேதைமையாவது தானும் அறியாது பிறர் சொல்லியும் அறியாது நிற்கும் அறிவில்லாத்தனம். நீங்கள் ஆக்கத்தை விட்டு அழிவைத் தேடமாட்டீர்களா? கற்றுணர்ந்து கற்றதைப் பிறர்க்கு ஓதிவிட்டு அதன்படி வாழ மாட்டாதவர்களைத் துளியும் மதிக்க மாட்டீர்களா? கேடு செய்யும் அயலார் அண்டிவாழ, நலம் செய்யும் சுற்றம் அகன்று ஓட வாழும்

வாழ்வைப் பற்றாமல் ஒழிப்பீர்களா? இவற்றைக் கொண்டு திரிவாரை ஒன்றாமல் ஒதுக்கத் துணிவீர்களா? நீவிர் வள்ளுவர் கூறும் **பேதைமை** யற்ற பிறப்பாளர் ஆவீர்!.

★ ★ ★

## 85. புல்லறிவாண்மை

- இல்லாமை என்பது அறிவில்லாமையே அன்றிப் பிறிதில்லை என்னும் அறிவார்ந்த நோக்குடையவர்களா நீங்கள்? தனக்குத் தீமையைப் பகைவன் இல்லாமலும் தானே செய்யும் அறிவிலியை, யானே அறிவுடையேன் என்று செருக்கித் திரிவானை, அரிய மறைவுக் கருத்தையும் பறையறையும் வினைக் கேடனை, ஏவவும் செய்யாமல் தானும் செய்யாமல் இருக்கும் தீராத் துயர்ப் பிறவியாய் இருப்பானை இக்குமுகாயக் கேடனெனக் கொள்கிறீர்களா? ஆம் எனில், வள்ளுவர் தெளிவித்த **புல்லறிவாண்மை** பொருந்தாத வாழ்வினர் ஆவீர்!

★ ★ ★

## 86. இகல்

- நான் பண்பு இல்லாதவன் எனத்தன்னை வெளிப்படக் காட்டும் ஒருதன்மை இகலாகும். இகல் இயல்பாளன், கெடுவதும் அழிவதும் அடையாமல் தீராது. இகல் உடையவன் பகல் பொழுதில் இருந்தாலும் அவனுக்கு அப்பொழுது இருள் பொழுதேயாம். அவன் பக்கமும் பாரேன் என்னும் உறுதிப்பாடு உங்களுக்கு இருந்தால் வள்ளுவர் கண்ட **இகல்** வென்ற வெற்றியாளர் நீங்களேயாம்.

★ ★ ★

## 87. பகை மாட்சி

- பகை இருவகை; அழிக்கும் அழிபகை ஒன்று; அழிபடும் பகை மற்றொன்று. அழிபடும் பகையின் நலம் - சிறப்புப் பற்றியது இப்பகைமாட்சி. மெலியார் பகை, அன்பிலான் துணையிலான் வாய்ப்பிலான் பகை; கல்லான் பகை; நீங்காச் சினத்தன் பகை; சினம்

காமங்களுக்கு இடமானவன் பகை; பக்கத்தில் இருந்து பலகேடும் செய்யும்பகை. இப்பகை ஒருவனுக்கு வாய்ப்பது தன்னை வலுப்படுத்தும்; வாய்த்த வெற்றிதரும் என்று அப்பகைமையை எளிதில் ஒழிக்க வல்ல எண்ணம் இருக்கும் உங்களுக்கு எனின், நீங்கள் **பகைமாட்சி** போற்றிக் கொள்ளும் வள்ளுவ வாழ்வினராம்.

★ ★ ★

## 88. பகைத்திறம்

- மகிழ்வாம் பொழுதிலும் பகை என்னும் பண்பற்றதைக் கருதாமை, சொல்லேர் உழவர் பகை கொள்ளாமை, பகையையும் நட்பாகக் கொண்டொழுகும் பண்பு, இருவர் பகையாம் நிலையில் ஒருவரை நட்பாக்கிக் கொள்ளல், தன்துயரம் சொல்லக் கேட்கும் செவியில்லார்க்குச் சொல்லாமை, என்றும் பகைத்திறம் தெரிந்து முளைக்கும் போதே முட்செடியை அழிப்பது போல அழிக்கும் செயல்திறம் உங்களுக்கு இருந்தால் வள்ளுவர் கூறும் **பகைத்திறம்** தெரிதல் உணர்ந்து போற்றுபவர்கள் ஆவீர்!

★ ★ ★

## 89. உட்பகை

- உள்ளாராக இருந்து ஒழித்துத் தீர்ப்பவர் உட்பகையாவர். அவ்வுட்பகை எள்ளளவு கூட இருத்தல் ஆகாது. செப்பின் அடியும் மூடியும் ஒட்டியிருப்பது போல் இருந்தாலும் உட்பகை உட்பகையேதான். பாம்போடு கூடிக் குடியிருக்க எவ்வளவு விழிப்பாக இருந்தாலும் கூடுமா? புதைமண், புதைமணல், அளறு என்னும் நிலங்கள் தன்னுள் வருவாரை உள்வாங்கி அழிப்பது போல வெளியே புலப்படாமல் அழிப்பது உட்பகை! இவற்றை உணர்ந்து இடம் தராமல் வாழும் விழிப்புடையவர் நீங்கள் எனின் வள்ளுவத் தெளிவாம் **உட்பகை** வென்ற உரவோர்கள் நீங்களாம்!

★ ★ ★

## 90. பெரியாரைப் பிழையாமை

- குன்றம் போன்ற நிலைமையர் பெரியர்; உயரிய கொள்கை வீரர் அவர்; சிறந்தமைந்த சீர்மையர் அவர்; அவரைப் போற்றிவாழ்தலே போற்றுதல் ஆகும். அவர் சொல்வழி செல்லாமை கேடாம்; தீயின் எரியால் சுடப்படாது தவிர்ந்தாலும் **பெரியவரைப் பகைத்தவர்** தப்புதல் இயலாது. மதிப்புமிக்க வாழ்வு, பல்வகை வாய்ப்பு, ஆளும் திறம் ஆயவராலும், மெய்யான பெரியவர்க்கு மாறாக நடந்து உய்ய இயலாது என்னும் வள்ளுவ நம்பிக்கையரா நீங்கள், கட்டாயம் வள்ளுவத் தோன்றல்களே நீங்கள்!

★ ★ ★

## 91. பெண்வழிச் சேறல்

- கேடான பெண்களைச் சார்ந்து வாழ்பவர் செயல்திறம் ஒழிவார்: அவர் நாணத்தக்க பிறவியர் ஆவர்; நல்லவர்க்கு நல்லவை செய்ய இயலாது; என்ன பெருநிலையில் வாழினும் இழிவே அடைவர்; நண்பர்க்கு உதவ முடியாதவர் ஆவர்; அறம் புரிதலோ, பொருள் தேடலோ கொள்ளார். எண்ணத்தக்க வாழ்வு இல்லாமல் ஒழிவார் என்னும் தேர்ந்த உணர்வு உங்களுக்கு உண்டு என்றால் நீங்கள், வள்ளுவர் உரைத்த **பெண்வழிச் சேறல்** சிறுமையை ஒழித்த சிறப்பாளர் ஆவீர்!

★ ★ ★

## 92. வரைவின் மகளிர்

- கட்டுப்பாடற்ற வாழ்வுடையவர் வரைவின் மகளிர் ஆவர். அவர் அன்பால் விரும்பார்; அவர் விரும்புவது பொருளே; அவர் ஒருவரை நம்பியிரார்: தம் நன்மை ஒன்றே கருதுவார். கட்டுப்பட்டு நிற்றல் என்னும் எண்ணமே இல்லார். பொருளும் புகழும் இழக்கச் செய்வார். இத்தகையரை எண்ணியும் பாராமல் ஒதுங்குவேம் என்னும் உறுதி உங்களுக்கு உண்டா? உண்டானால் வள்ளுவர் சொல்லும், **வரைவின் மகளிர்ச்** சாராச் சால்புமேம்பாட் டாளராவீர்.

★ ★ ★

## 93. கள்ளுண்ணாமை

- மதுப்பற்றில்லையா? மதிப்பு உண்டு; அறிவுத் தெளிவு உண்டு; பெற்றவரும் மதிப்பார்; பொருள் அழிந்து போகாது; அயர்வு அண்டாது; ஊரார் நகையார்; மதுவால் மதிமயங்காப் போதில், மதுவில் மயங்கிக் கிடப்பாரைக் காணின் உண்மை உணர்வார்; ஆதலால் மதுப்பழக்கம் கொள்ளார். பெரியோர் முன் நிற்க வேண்டா என்று நினைப்பவர் பருகுவது மது – என்னும் வள்ளுவ வாய்மொழியை மதிக்கும் மாண்பரா நீவிர்? கட்டாயம் வள்ளுவர் காட்டும் **கள்ளுண்ணாமைச்** சான்றாராகத் திகழ்பவர் நீவீரேயாம்.

★ ★ ★

## 94. சூது

- சுற்றிச் சுற்றிவரச் செய்து பற்றாயவற்றை யெல்லாம் இழக்கச் செய்வது சூழ்தாம் சூது. வெற்றியாகத் தோற்றுவவெல்லாம் தோற்பதற்குப் போடும் தூண்டில்; எல்லாப் பேரும் பெருமையும் இழந்து 'சூதாடி' என்னும் ஒன்றைப் பெறவோ இந்த ஆட்டம்! பாட்டன் பூட்டன் சொத்தா, குடும்பச்சிறப்பா – எல்லாம் கொண்டு போகும்; தோற்கத் தோற்க ஆர்வம் பெருக்கும் அது; நான் பரிசுச் சீட்டுத் தானும் பெறேன்; குலுக்குச் சீட்டையும் குறுகேன்; செம்பைப் பொன்னாக்க, பணத்தாளை இரட்டிப்பாக்க எண்ணவும் மாட்டேன் என்பவர்கள் நீங்கள் என்றால், வள்ளுவம் வாயாரப் பாராட்டித் தழுவிக் கொள்ளும் **சூதறி**யாச் சுடர்ப் பிறப்பர் நீவிர்!

★ ★ ★

## 95. மருந்து

- என் உடலை யான் கெடாத அளவும், மருந்து வேண்டுவ தில்லையே, என் உடல் அவ்வளவு அரிய படைப்பு அல்லவோ!

உண்பேன்; உண்டது, அறவே எரிந்து அற்றுப் போகக் காண்பேன். பசியளவு, என்குடல் அளவு, தேவை அளவு என்பவை அறிந்தே

உண்பேன். நோய்வரினும் அதன் மூலம் – நாடி நிலை – ஆயவற்றைத் தக்காரைக் கண்டு அவர்வழி நிற்பேன் என்று உறுதி நோன்பு உங்களுக்கு உண்டா? நீங்களே வள்ளுவர் மா**மருந்து**பற்றித் தெளிந்த மாண்மருத்துவர்! நீடு வாழும் நெறி முறையர்!

★ ★ ★

## 96. குடிமை

- நடுவுநிலை உண்டா? செய்யாதன செய்ய நாணம் உண்டா? வாய்மை போற்றுவீர்களா? மலர்முகம், பகைபாராட்டாமை, இனியவை இயம்பல் உண்டா? நீங்கள் எக்குடிப்பிறப்பினும் நற்குடிப்பிறப்பர். கோடி கொடுத்தாலும் கொள்கை தவறாமை எம்குடிமைச் சொத்து; என் சொல் குடிமைச் சொத்து என்பவர்களா நீங்கள்? வள்ளுவர் தம் நூலால் காணவிரும்பிய **குடிப்பிறப்பு**டையார் நீவிரே ஆவீர்!

★ ★ ★

## 97. மானம்

- தாழ்வு வரும் செயலா, வாழ்வு கருதியும் அதனைச் செய்யேன் என்னும் மானம் எனக்கு உண்டு என்று நீங்கள் கருதினால் வள்ளுவர் கண்ட மானி நீங்களே.

செல்வம் அறிவு பதவி பெருகப் பெருகப் பணிவும், குன்றியளவும், குறை செய்யாமையும், பொருந்தார் பின் போய் நில்லாப்புகழும், போற்றுவது என் உயிர்ப்பு என்பீர்களா? வாருங்கள் வள்ளுவர் வருக வருக என வரவேற்ற **மானப்** பிறப்பர் நீவிர் தாம்.

★ ★ ★

## 98. பெருமை

- பிறப்பு ஒருமை பேணுவதே என் உயிர், மேலே கீழே என எவரையும் மதியேன்; தாழ நினையேன். பணிவை அணிகலம் எனத் தாங்குவேன். செருக்கு என்னும் சீரிலாமையின் பேரும் அறியேன்; எவர்குற்றமும் எடுத்துக் கூறேன். இவை என் வாழ்வியல் கொள்கை

என்பவர்களா நீங்கள்? அன்பர்களே வருக! புகழர்களே வருக! வள்ளுவர் **பெருமைப்** பெற்றியர் நீவீரேதாம்.

★ ★ ★

### 99. சான்றாண்மை

- நல்லவை எல்லாம் செய்தல் எம் கடமை; கொல்லாமை எம் நோன்பு; பிறர் தீமை சொல்லாமை எம் சால்பு; ஒப்புரிமை இல்லா ஒருவரிடமும் தோல்வியை ஒப்புக் கொள்ளும் பணிவு; இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் தகவு. இயற்கை ஏறுமாறு ஆகா. அவ்வாறு ஆகினும் ஆகேன் என்னும் கட்டமைவு உடையேன் யான் என உங்களை நீங்கள் உணர்கிறீர்களா? அவ்வாறானால் நீங்களே, உலகம் உய்யச் செய்ய வந்த வள்ளுவச் **சான்றாண்மை** யாளர்.

★ ★ ★

### 100. பண்புடைமை

- எவரிடமும் பண்புடன் நடப்பேன்; அன்புடைமை பேணுவேன்; என் குடிப்பெருமை நாட்டுவேன்; நயனொடு நன்றி புரிவேன்; விளையாட்டாகக் கூட எவரையும் இகழேன்; பகைவரிடமும் பண்புடன் நடப்பேன்; மூளையரினும் நெஞ்சரைப் பற்றுவேன்; நண்பை மறந்தாரிடத்தும் யான் பண்பை மறவேன்; என் செல்வம் பண்பாளன் செல்வம் என நிலை நாட்டுவேன். என்பவையெல்லாம் உங்கள் வளமான உளப் பொருளாக உளவா? நீங்களே வள்ளுவர்கண்ட **பண்புடைமைச்** சான்றாகிப் பாருலகம் காப்பவர்கள்!

★ ★ ★

### 101. நன்றியில் செல்வம்

- செல்வத்தின் பயன்பாடு செல்வம் உடையவனைச் சார்ந்தது. ‘தேடுவேன்; நான்பயன் கொள்ளேன்; பிறர்க்கும் பயன்படுத்தேன்’ என்பவன் செல்வத்தைத் தேடி என்ன? கோடி கோடியாய்ப் பொருள் குவித்தும் என்ன? அன்பு இல்லாமல், அறம் கருதாமல், தன்னையும் அழித்துக் கொண்டு எல்லாமும் பொருளால் ஆகும் என்று எண்ணும்

நன்மை இல்லாதான் செல்வம் பண்பாட்டுக்குக் கேடு, நலத்துக்குக் கேடு என வெறுக்கும் நல்மனம் உங்களுக்கு உண்டா? நீங்களே வள்ளுவர் விரும்பிய **நலப்பேறாம் செல்வர்.**

★ ★ ★

## 102. நாணுடைமை

- 'என் செயல் தவற்றுக்காக எனக்கே நாணம் ஏற்படுகின்றது' என்னும் எண்ணம் ஏற்படுவது உண்டா? பிறர் நாணத் தக்கதை எண்ணி 'நான் நாணத் தவறேன்; தவறானவை செய்யேன்' என்னும் சீரிய சிந்தனை உங்களுக்கு உண்டா? நாண அணிகலமே அணிகலம் என்னும் பெருமிதம் உங்களுக்கு உண்டா? அவ்வாறானால் வள்ளுவர் கூறிய **நாணுடைமைத்** தோன்றல் நீவீரே ஆவீர்.

★ ★ ★

## 103. குடிசெயல்வகை

- 'நான் செயலாற்ற எவர் கையையும் எதிர்பாரேன்;என் குடும்பத்தை உயர்த்தக் காலம் பார்த்துக் கொண்டு இரேன்; சோம்பியிரேன்; மானம் பாரேன்; உழைப்பேன்; உழைப்பேன்; ஓயாது உழைப்பேன்; என் உழைப்பு உயர்ந்தவர்கள் உள்ளங்களை எட்டும். அவர்களும் உதவிக்கு ஓடிவருதல் உறுதி' என்னும் உறுதிப்பாடு உங்களுக்கு உண்டா? நீங்களே வள்ளுவர் வார்த்தெடுத்த **குடிசெயல்வகைத்** தோன்றல்கள்.

★ ★ ★

## 104. உழவு

- உழவர் செயலற்றால் உலகம் செயலற்றுப் போகும்; பற்றற்றேம் என்னும் துறவரும் உழவர் உழைப்பின்றி வாழார். உலகில் பிறர் கையை எதிர்பாராப் பிறவியும், எதிர்ப்பார்ப்பார்க்கு இல்லை என்னாது உதவும் பிறவியும் - உழவப்பிறவியே! உலகத்தேர்க்கு அச்சாணியாவார் அவரே எனக் கொண்டு, அவ்வுழவரைப் போற்றி மதித்து அவர்க்கு வேண்டுவ வெல்லாம் புரிதல் என்கடன் எனக்

கொள்ளும் நன்றிப் பிறவியரா நீவீர், நீவீரும் **உழவர்** அன்ன உயர்வினராய் வள்ளுவ வான்புகழுக்குரியீராவீர்!

★ ★ ★

## 105. நல்குரவு

- நல்கு உரவு = நல்ல வலிமை; வறுமை. வறுமையாவது நல்ல வலிமைக்கு ஊற்றுக்கண் என்னும் பொருளது, வறுமைக் கொடுமைக்கு இணை வறுமைக் கொடுமையே; நொடி நொடியும் கொல்லும் துயர் அது. நொடி நொடியும் சுட்டெரிக்கும் தீ அது. எனினும் அவ்வறுமையை என் வலிமையாக்கி வாழ்ந்து காட்டுவேன் என்னும் திண்ணிய நெஞ்சும் செயலுறுதியும் உங்களுக்கு உண்டா நீங்களே வள்ளுவர் கூறிய **நல்குரவை** வென்று காட்டும் வீறுடையார்!

★ ★ ★

## 106. இரவு

- எனக்கு வேண்டும் அறிவை - ஆற்றலை - திறத்தைப் பெறுதற்கு ஒருவரைச் சார்ந்து நிற்பேன்; கேட்டுப்பெறுவேன்; அதற்கும் தக்காரை அன்றி அணுகேன்; ஒன்றைக் கேட்குங்கால் இகழ்வு நோக்கு நோக்குவாரை மறந்தும் அணுகேன்; பிறரிடம் ஒன்றைப் பெறவிரும்பும் யான், சினங் கொள்ளமாட்டேன் என்னும் மனம் உங்களுக்கு உண்டானால், வள்ளுவர் கூறும் **இரவு** இலக்கணம் பெற்றவர் நீவிர் என்று ஆவீர்!

★ ★ ★

## 107. இரவச்சம்

- எனக்காக எனினும், பொதுவுக்காக எனினும், எதற்காக எனினும் ஒருவரிடம் ஒன்றைக் கேட்டுப் பெறுதல் என் நிலைக்குத் தாழ்வே என உணர்கிறீர்களா? கேட்டுப் பெற்று நல்லவை செய்தலினும், ஆயிரத்தில் ஒருபங்கே எனினும் என் உழைப்பால் என்பொருளால் உதவுதலே உயர்வு எனப் பெருமையாக நினைக்கிறீர்களா? நீங்களே

வள்ளுவர் கண்ட **இரவச்சம்** உணர்ந்து செயல்படும் செய்யர்; வள்ளுவத்தோன்றல் நீங்கள்;

★ ★ ★

## 108. கயமை

- தோற்றத்தால் மக்களாக இருந்து, செயற்பாட்டால் பண்பால் மக்களாக இல்லா இழிமை எனக்கு வேண்டா. அஞ்சிச் செய்யேன்; அச்சுறுத்தற்காகக் கட்டுப்படாமல் யானே துணிந்து எனக்குயானே நெறியாளனாக வாழ்வேன்; பிறர் செயலில் தலையிடேன்; வேண்டாச் செய்தியைப் பரப்பேன். என்னை எதற்காகவும் விலைபேசமாட்டேன் என்னும் விழுப்பங்களின் வாழ்வாக நீங்கள் உள்ளீர்களா? நீங்களே வள்ளுவர் கண்ட கயமை ஒழிப்புப் போராளியாய் வள்ளுவ அறக்களத் தலைமை வீறுடையர் ஆவீர்!

★ ★ ★

# ௩. காமத்துப்பால்

திருக்குறளின் மூன்றாம் பால் **காமத்துப்பால்**. கமம் = நிறைவு. காமம், நிறைவும் நிலை பேறும் அமைந்த நிலை. அச்சொல் திருக்குறளில் மூன்றாம் பாலில் 39 இடங்களில் இடம் பெற்றுளது. இரண்டே இரண்டு இடங்களில் மட்டும் இன்பம் என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார் வள்ளுவர். அக்குறள்களிலேயே காமம் என்னும் சொல்லும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

காமம் இடைக்காலத்தே, தன் பெருமை மிக்க பொருளை இழந்து, இழிமைக்கு ஆட்பட்டது. அந்நிலையில் அச்சொல் 'இன்பம்' என வழக்கில் ஊன்றியது.

இன்பம் என்பது **எல்லா உயிர்க்கும் பொதுத் தன்மையது** என்பது தொல்காப்பியம். ஆனால், காமம் என்பதோ **மாந்தர் இனத்துக்கு மட்டுமே உரிய சிறப்புச் சொல்லாகும்.** நிறை காதல் வழிப்பட்டுப் பெருகிய காமம், விண்ணின்பம் ஒப்பது என்பது வள்ளுவம் ஆகும்.

**மாலிய உலகின் மாணின்பமும்** எம் கிழத்தியின் இன்பத்திற்கு இணையாகாது என்பது வள்ளுவர் கூறும் காதல் தலைவன் கூற்று (1103). மெய்யான **அமிழ்தும், கற்பகமும், காமதேனுவும்**, உலகில் உண்டு என்றால், உயிரொத்த உணர்வொத்த காதல் வழிக் கற்பு வாழ்வே என்பது வள்ளுவம்.

இவற்றை உரைக்கும் குறள்கள் : எ-டு:

"அமிழ்தின் இயன்றன தோள்" (1106)

"இல்லதென் இல்லவள் மாண்பானால்" (53)

"பாலொடு தேன் கலந்தற்றே" என்பவை அன்னவை. (1121) உயிரொத்த இல்வாழ்வே **வான்மழை** என்பதும், அவ்வாழ்வு பெற்றார் **வீடுபேற்று இன்பம் பெற்றார்** என்பதும் வள்ளுவம். எ-டு :-

"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி" (1182)

"பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு" (58)

“தூய துறவர்க்கும் துணையாம் இல்வாழ்வே, அறத்துள் தலைப்பட்ட அறமாம்” என்பதும் (46) இல்லறமே நல்லறமாகக் கொண்டவர் திறம், துறவோர் தமக்கும் மேம்பட்டது என்பதும் வள்ளுவம். (48) அவ்வாறே, ‘வாழ்வாங்கு வாழும்’ வாழ்வாவது இல்வாழ்வே என்பதும், அவ்வாழ்வே ‘தெய்வ வாழ்வு’ என்பதும் வள்ளுவம் (50)

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்” என்பது அது. (50)

**முப்பால் இன்பமும்** (அறம், பொருள், இன்பம்) ஒருங்கே கொள்ள வாய்ப்பது சீரிய இல்லற வாழ்வே என்பதை,

“தம்இல் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு” (1107)

என்கிறது. அவை முறையே,

தம் இல் இருத்தல், **அறம்.**

தமது பாத்துண்ணல், **பொருள்.**

அரிவை முயக்கு, **இன்பம்.**

இம் முப்பால் கொள்கையைத் தொல்காப்பியர்,

**“அறம் பொருள் இன்பம்”** என்றும்
**“இன்பமும் பொருளும் அறனும்”** என்றும்

நேர் முறையிலும் எதிர் முறையிலும் கூறி வாழ்வியல் **‘சுழல் முறை’** இயற்கை அமைந்தது என்பதை மெய்ப்பிப்பார்.

பொருளில் தொடங்கி, இன்பம் அறம் எனவும் கொள்ளலாம். இன்பத்தில் தொடங்கிப், பொருள் தேடி அறம் புரியலாம்.

அறத்தில் தொடங்கிப் பொருள்தேடி இன்புறலாம். இம்மூன்றும் ஒப்ப இயலல் வாழ்வியல் கொள்வார், வாய்ப்பு, சூழல், திறம் என்பவற்றைச் சார்ந்தது என்பதை விளக்குவதாம். தொல்காப்பியர் கூறும் பாவகையுள் ஒன்று **வெண்பா.** அவ் வெண்பாவுள் குறுகிய அடிகளை – இரண்டடிகளை யுடையது **குறள் வெண்பா.** அது ஏழு சீர்களால் இயல்வது. அதன்

அடிச்சிறுமையின் நிலையை எண்ணியும், மூவடி, நாலடி, பலவடி என்பற்றை நோக்கியும் **'முதற்பா'** எனப்பட்டது. ஓரடி தானும் பாட்டாம் என்பதை ஒப்பும் தொல்காப்பியர், வெண்பாவுள் சிறுமை ஈரடி என வரம்பு செய்து அதனைக் **குறட்பா** என்றார். அதுவே, அளவில் சுருங்கிய பாவாதலால் **முதற்பா** என்றனர். அதனைப் பாடி அழியாப் புகழாளராகத் திகழ்ந்தவர் வள்ளுவர் ஆகலின், அவர் **'முதற்பாவலர்'** எனப்பட்டார். அவர் மொழி **பொய்யா மொழி, பொருள் மொழி** எனப்பட்டன. அப்பொய்யாமை நெறியும் பொருள் நெறியும் இலக்கண முறையில் காட்டிவைத்தவர், ஆசிரியர் **தொல்காப்பியர். அவ்விலக்கணமாகிய** நூன் முறையாம் மேன்முறையை, அப்படியே **இலக்கிய மாக்கி** இனிக்கச் செய்தவர் **திருவள்ளுவர்.**

ஆசிரியர் தொல்காப்பியர், **புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல்** என உரிப்பொருள் ஐந்தென உரைத்தார். **புணர்தலாவது,** தலைவன் தலைவியர் கூடியிருத்தல். **பிரிதலாவது,** அன்பால் கூடிய கூட்டம் உள்ளத்தால் தொடர, உடலால் பிரிதல். **இருத்தலாவது,** தலைவன் தலைவியர் தமக்குள்ள அன்பை நினைந்து இல்லத்தில் இருத்தல். **இரங்கலாவது,** தலைவன் தலைவியர் தாம் பெற்ற இன்பம் நினைந்து அது பெறக் கூடாமைத் துயரை நினைந்து இல்லங்கடந்து சென்று தனிமையில் வருந்துதல். **ஊடலாவது,** பிரிவு நீங்கிக் கூடிய நிலையில் அவ்விருவர் தம் இன்பமும் பெருகச் சிறுசினம் கொண்டிருந்து, ஒருவரில் ஒருவர் தாழ்ந்து நேய மிக்கோராய் ஒன்றுபடுதல்.

தொல்காப்பியர் வகுத்த **முதற்பொருள்** (நிலம், காலம்) **கருப் பொருள்** (தெய்வம், உணவு முதலியன) ஆகியன இருபொருள்களினும் சிறந்த பொருள் **உரிப்பொருள்** ஆதலின், அதனையே தம் நூன்முறைப் பொருளாக்கிக் கொண்டவர் திருவள்ளுவர். ஆதலால், **புணர்தல்** உரிப்பொருளுக்கு முதல் ஐந்து அதிகாரங்களையும் (தகையணங்குறுத்தல், குறிப்பறிதல், **புணர்ச்சி மகிழ்தல்,** நலம் புனைந்துரைத்தல், காதற் சிறப்புரைத்தல்), **பிரிதல்** உரிப்பொருளுக்கு இரண்டாம் ஐந்து அதிகாரங்களையும் (நாணுத்துறவுரைத்தல், அலர் அறிவுறுத்தல், **பிரிவாற்றாமை,** படர்மெலிந்திரங்கல், கண்விதுப்பழிதல்) **இருத்தல்** உரிப்பொருளுக்கு, மூன்றாம் ஐந்து அதிகாரங்களையும் (பசப்புறு பருவரல், தனிப்படர்மிகுதி,

**நினைந்தவர் புலம்பல்,** கனவுநிலை உரைத்தல், பொழுது கண்டு இரங்கல்) **இரங்கல்** உரிப்பொருளுக்கு, நான்காம் ஐந்து அதிகாரங்களையும் (உறுப்புநலன் அழிதல், நெஞ்சொடு கிளத்தல், **நிறையழிதல்,** அவர்வயின் விதும்பல், குறிப்பறிவுறுத்தல்) **ஊடல்** உரிப்பொருளுக்கு, ஐந்தாம் ஐந்து அதிகாரங்களையும், (புணர்ச்சி விதும்பல், **நெஞ்சொடுபுத்தல், புலவி,** புலவி நுணுக்கம், ஊடலுவகை) **நூன்முறையில்** ஓதினார்.

அறத்துப் பாலில் அமைந்த இல்வாழ்க்கை முதல் புகழ் ஈறாகிய அதிகாரங்கள் **வாழ்வியல் நெறியவை.** முறையமைந்த இல்வாழ்வினர் நிறை நலம் கூர்ந்து வாழ்வாங்கு வாழ்தல் பற்றி உரைப்பவை. அதன் மேல் வரும் அருளுடைமை தொடங்கி அவா அறுத்தல் (25-37) இறுதியாகிய அதிகாரங்கள், தொல்காப்பியர் வகுத்துக் காட்டிய முந்தையர் நெறிமுறையாம் **துறவு வாழ்வு** பற்றியவை. அது,

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்னும் '**தவநெறி**' யாகும் (1138)

நூன் முறையை எப்படிச் சொல்வது என்பதையும் தொல்காப்பியர் உரைத்தார்.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்
உரிய தாகும் என்மனார் புலவர்" (999)

என்றும், "மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறா அர்" (1000)

என்றும் கூறினார்.

**வாழ்வியல்** காட்டிய அறத்துப்பாலுக்கும், **நூன்முறை** காட்டிய காமத்துப் பாலுக்கும் வேறுபாடு உண்டோ எனின், உண்டு என்பதாம். ஆனால், **வேறுபாடே அன்றி, மாறுபாடு இல்லை** என்பதுமாம்.

காமத்துப்பால் நிகழ்ச்சி நாடக வழக்குப் போல்வது. திரைப்படம் புனைகதை ஒப்பவே வாழ்வியல் அமைதல் உண்டா? அவ்வவர் நாடித்துடிப்பு, உடல் நிலை, உணர்நிலை, அறிவுத்திறம், ஆற்றற்பாடு என்பவை வெவ்வேறுபட்டவை போலவே, வாழ்வியலும் வேறு வேறுபட்டவை. ஆனால், அப்பலவற்றையும் பலப்பல உணர்வாலும் ஒருவன் தான் உணர்ந்து, தன் புனைவுத் திறத்தாலும் உணர்வு முறையாலும் படைத்துக் காட்டுவது நாடகநிலை. மக்கள் வழக்க நிலையில் இருந்து உருவாக்கப்படுவதே நாடகம் (நாடு + அகம்) எனினும், **அப்படியே வாழ்வாகிவிடாது.** அதே போல், வாழ்வை அப்படி அப்படியே நாடக மாக்கினும் சுவைத்திறம் குன்றவே செய்யும். இரண்டன் ஊடகங்களும் ஒன்றாயினும், நடையியலால் காட்சிப் புனைவால் - சொல்லாடலால் வேறு வேறு பட்டனவேயாம் என்பதை உணர்ந்தால் வள்ளுவர் வகுத்த **வாழ்வியல் அறமும், நூல் முறை அறமும்** நுண்ணிதின் விளக்கமாம்.

'நாடகமே உலகம்' என்று பின்னாளில் மேலை உலகம் கண்டதைப் புறநானூற்றுப் புலவன், "ஆடுநர்க் கழியும் உலகம்" என்றான். அவனுக்கு முன்னைத் தொல்காப்பியன் தனக்குத் தொல்லோர் வழங்கிய கொடையாக,

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்"

என்றான். இங்குக் கூறப்பட்டவை எம் கல்வி அறிவொடும், எம் பட்டறிவொடும், எம் முந்தையர் வழி முறையொடும் ஒத்துக் கொள்ளத்தக்கவை என்னும் எண்ணமும் தெளிவும் ஏற்புடைமையும் உங்களுக்கு உண்டா? உண்டு எனின், நீவிர் வள்ளுவத் தோன்றல் வகுத்த 'காமத்துப் பால்' நூனெறிபற்றிக் கொண்ட நுண்ணிய தோன்றல் ஆவீர்! நீவிர் வள்ளுவ வழியர் என்பது கையிடைக் கனியாய்க் காட்சியின்பமே யன்றிக் கவின் சுவை இன்பமும் பெற்ற பேற்றுக்கு உரியவர் ஆவீர்!

நுங்களுள் படைப்புத்திறம் மிக்கார் உண்டு என்பதை யான் அறிவேன். அத்தகையர் இந்நூன்முறை போற்றல், இந்நூன்முறையைப் படைப்புத்திறனால் பரப்பல் மேற் கொண்டால் அத்தகையர் வள்ளுவப் பரப்பாளராம் சிறப்பாளராவர்.

நூற்கொடையினும் மேற்கொடை ஒன்று உண்டோ? அந்நூற்கொடையையும் உணர்வுடையார்க்கு உரிய வகையால் அவரவர் நிலைக்குத் தகத் தாமே உணர்ந்து எதிர்கால உலக நலங்கருதி வழங்குபவர் எத்தகையர் எனின், வள்ளுவம் தரும் விடை வான்மழை ஒப்பவர். வளரும் பயிர்க்கு வான்மழைப் பொழிவென வழங்கும் ஈகையர் என்பதாம். ஆதலால் நீவிர் வள்ளுவர் கண்ட கொடை வண்மையரும் ஆவீர்!

வள்ளுவத் தோன்றல்களே. வாருங்கள்!
வையகத் தொண்டில் தலைப்படுவோம்!
வள்ளுவ மாதலும், வள்ளுவம் பரப்பலும்
வையகத் தொண்டாம். அதிலும் குறிப்பாக
இக்கால உலகுக்குச் செய்ய வேண்டும்
ஈடும் இணையும் அற்ற தொண்டாகும்.
அத் தொண்டில் முனைவோம்! வெல்வோம்!.

★ ★ ★

அறமும் பொருளும் ஆகிய திருக்குறள் 108 அதிகாரங்களும், அதிகாரம் ஒவ்வொன்றும் ஐந்து முதல் பத்து வரிகளுக்குள் அமையுமாறு திரட்டாக வரையப்பட்டவை.

திருக்குறளின் மூன்றாம் பால் காமத்துப்பால், கமம் = நிறைவு. காமம், நிறைவும் நிலை பேறும் அமைந்த நிலை. அச்சொல் திருக்குறளில் மூன்றாம் பாலில் 39 இடங்களில் இடம் பெற்றுளது. இரண்டே இரண்டு இடங்களில் மட்டும் இன்பம் என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார் வள்ளுவர். அக்குறள்களிலேயே காமம் என்னும் சொல்லும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

காமம் இடைக்காலத்தே, தன் பெருமை மிக்க பொருளை இழந்து, இழிமைக்கு ஆட்பட்டது. அந்நிலையில் அச்சொல் இன்பம் என வழக்கில் ஊன்றியது.

இன்பம் என்பது எல்லா உயிர்க்கும் பொதுத் தன்மையது என்பது தொல்காப்பியம். ஆனால், காமம் என்பதோ மாந்தர் இனத்துக்கு மட்டுமே உரிய சிறப்புச் சொல்லாகும். நிறை காதல் வழிப்பட்டுப் பெருகிய காமம், விண்ணின்பம் ஒப்பது என்பது வள்ளுவம் ஆகும்.

**முனைவர் அ. ஆறுமுகனார் - சாரதையார்**
**அறக்கட்டளை, 1 - 10 வரிசை நூல்கள் (1)**